டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 13.02.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 194 - Madurai | Online Edition

# விலங்கு நலன் மற்றும் பரிசோதனையில் நெறிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் குறித்த தேசிய கருத்தரங்கு

புது தில்லி, பிப்.12

வளர்ந்த பாரதம் 2047-ஐ நோக்கி இந்தியா பாடுபடும் சகாப்தத்தில், சி.சி.எஸ்.ஐ.ஏ-வின் ஆதரவுடன், விலங்கு நலன் மற்றும் பரிசோதனையில் நெறிமுறைகள் மற்றும் ஒழுங்கு முறை வழிகாட்டுதல்கள் என்ற தேசிய கருத்தரங்கு, புதுவைப் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறை, வாழ்க்கை அறிவியல் பள்ளி, நிறுவன கண்டுபிடிப்பு கவுன்சில் மற்றும் நிறுவன விலங்கு நெறிமுறைக் குழுவுடன் இணைந்து, விலங்கு அடிப்படையிலான ஆராய்ச்சியில் நெறிமுறை பொறுப்பு மற்றும் ஒழுங்குமுறை விழிப்புணர்வை வளர்க்கும் நோக்கத்துடன் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

விலங்கு அடிப்படையிலான ஆராய்ச்சி, நவீன உயிரி மருத்துவ அறிவியலின் மூலக்கல்லாகத் தொடர்கிறது. இது சிகிச்சைக் கண்டுபிடிப்புகள் மற்றும் மொழிபெயர்ப்பு மருத்து வத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தச் சூழலில், கருத்தரங்கு அறிவியல் சமூகத்தில் நெறிமுறை உணர்வு, ஒழுங்குமுறை அறிவு மற்றும் பொறுப்பான ஆராய்ச்சி நடைமுறைகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டது.

துணைவேந்தர் பேராசிரியர் பி.பிரகாஷ் பாபு, தலைமை உரையில், ஆராய்ச்சியில் குரலற்ற விலங்குகளுக்கான குரலாக சி.சி.எஸ்.ஐ.ஏ மற்றும் அதன் நியமனங்களின் நெறிமுறை ஆணையை அடிக்கோடிட்டுக் காட்டினார். இன் விவோ மாதிரிகளின் அறிவியல் முக்கியத்துவத்தை, இன் விட்ரோ தரவுகளை உறுதிப்படுத்துவதிலும் ஆராய்ச்சியின் நம்பகத் தன்மையை உறுதி செய்வதிலும் அவர் வலியுறுத்தினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மத்திய அரசின் சி.சி.எஸ்.ஐ.ஏ மூத்த ஆலோசகர் டாக்டர் விவேக் தியாகி, தேசிய கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். இந்திய அரசு, விலங்கு நலன் மற்றும் பரிசோதனையில் ஒழுங்குமுறை வழிகாட்டுதல் களை வலியுறுத்தியது.

தொடக்க அமர்வு டாக்டர் ருக்மணியின் வரவேற்பு உரையுடன் தொடங்கியது. மேடையில் இருந்த அனைத்து பிரமுகர்களும் குத்து விளக்கேற்றி, கருத்தரங்கை முறையாகத் தொடங்கினர். அமைப்புச் செயலாளர் பேராசிரியர் ஹன்னா ரேச்சல் வசந்தி, கருத்தரங்கின் விரிவான காட்சியை வழங்கினார். வாழ்க்கை அறிவியல், மருந்தியல், கால்நடை அறிவியல், எம்.டி. மருந்தியல், எம்.டி. சித்த மருத்துவம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த சுமார் 250 இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் பங்கேற்றனர். பல்கலைக்கழகம் மற்றும் அருகிலுள்ள நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 45 ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.

வாழ்க்கை அறிவியல் பள்ளியின் டீன் டாக்டர் ஜோசப் செல்வின் வாழ்த்துரையுடன் தொடர்ந்தது. அவர், உயிரி மருத்துவ அறிவியல் மற்றும் சுகாதாரக் கண்டுபிடிப்புகளில் விலங்கு ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தொழில்நுட்ப அமர்வுகளில் டாக்டர் ஹரிங்கர், டாக்டர் உதய்குமார் (என்ஐஎன்), டாக்டர் ஜெரால்ட் மகேஷ் (சிசிஎம்பி), டாக்டர் பாரதிதாசன், டாக்டர் கவிமணி, டாக்டர் விவேக் தியாகி ஆகியோர் நிபுணர் சொற்பொழிவுகளை வழங்கினர். அவர்கள் ஒழுங்குமுறை கட்டமைப்புகள், ஆய்வக விலங்கு வசதி வழி காட்டுதல்கள், விலங்கு நலத் தரநிலைகள் குறித்துப் பேசினர். புதுவைப் பல்கலைக்கழகத்தின் மத்திய விலங்கியல் ஒருங் கிணைப்பாளர் பேராசிரியர் திருநாவுக்கரசு, நன்றி உரை ஆற்றினார். நிபுணர் கண்ணோட்டங்களை மாணவர் ஈடுபாட்டுடன் இணைத்து, கருத்தரங்கு அறிவு பரிமாற்றம், நெறிமுறை விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டிற்கு துடிப்பான தளமாக விளங்கியது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மானியத் திட்டப் பணிகள் குறித்து களப் பார்வை மற்றும் ஆய்வு நடத்திய வேளாண்மை துணை இயக்குனர்



சேலம், பிப்.12

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப் பட்டு வரும் பல்வேறு மானியத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) கண்ணன் திடீர் ஆய்வு மேற் கொண்டார்.

இந்த ஆய்வின் போது, மணி விழுந்தான் கிராமத்தில் தேசிய சமையல் எண்ணெய் இயக்கத் திட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ள எள் மற்றும் நிலக்கடலை செயல் விளக்கத்திடல்களை பார்வையிட்டார். தொடர்ந்து, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மக்காச்சோள சிறப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின் (Integrated Farming System) கீழ் பயன் பெற்று வரும் விவசாயிகளின் வயல்களையும் ஆய்வு செய்தார்.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஆலோ சனைகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இந்த ஆய்வின் போது தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா, வேளாண்மை அலுவலர் ஜானகி, துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் உதவி வேளாண்மை அலுவலர்கள் நாகராஜ், பிரகாஷ், ரவிக்குமார், கார்த்திக், தமிழ்ச்செல்வன் மற்றும் சந்தோஷ் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி ஆகியோர் உடனிருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மகோகனி சாகுபடி விவசாயிகள் பயிற்சி



சேலம், பிப்.12

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டின் இரண்டாம் கட்ட நிதி ஒதுக்கீட்டில் உள் மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி மகோகனி சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து அறிந்து வர முப்பது விவசாயிகள் மூன்று நாட்கள் மேட்டுப்பாளையம் வன ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதில் அட்மா குழு தலைவர் சேர்மன் விஜயகுமார் கொடி அசைத்து விவசாயிகளை அனுப்பி வைத்தார். அயோத்தியா பட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப் பிரியா, மகோகனி சாகுபடி குறித்தும் இயற்கை பண்ணையம் குறித்தும் நன்கு அறிந்து வரும் படி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கிய அனுப்பி வைத்தார். உடன் அட்மா திட்ட அலுவலர்களான செல்வி, மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் சென்றுள்ளனர்.

# வெண்டை பயிரில் மஞ்சள் ஒட்டும் வலை செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.12

தேனி மாவட்டம், போடி நாயக்கனூர் வட்டாரத் திற்குட்பட்ட விஷ்வாசபுரம் கிராமத்தில், வெண்டை பயிரில் சுரண்டிப் பூச்சிகளை கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டும் வலை (Yellow Sticky Trap) பயன்பாடு குறித்த செய்முறை விளக்கம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி மதுரையைச் சேர்ந்த வேளாண் கல்லூரி மாணவி ஏஞ்சல் பிஜு, யூபுநிசி திட்டத்தின் ஒரு பகுதியாக 02.02.25 அன்று நடத்தினார். விவசாயிகள் மத்தியில் இந்த எளிய மற்றும் செலவுக் குறைந்த பூச்சி மேலாண்மை முறைக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

அக்ரி-டாக்டர்

agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கும் தொழில்நுட்பம் விளக்கம் அளித்த வேளாண் மாணவர்கள்



நாமக்கல், பிப்.12

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்கள், தங்களது களப்ப யிற்சியின் ஒரு பகுதியாக எலச்சிப் பாளையம் வட்டாரத்தில் உள்ள விவசாயி களை நேரில் சந்தித்து, ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கும் நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் குறித்து விரிவாக விளக்கம் அளித்தனர். இந்த நிகழ்ச்சியின் போது, பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்கங்களை கட்டுப்படுத்த ட்ரோன் தொழில்நுட்பம் எவ்வாறு பயன்படுகிறது என்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக, குறுகிய நேரத்தில் அதிக பரப்பளவில் மருந்து தெளிப்பது, மனித உழைப்பை குறைப்பது, மருந்து அளவை துல்லியமாக கட்டுப்படுத்துவது போன்ற ட்ரோன் தெளிப்பு முறையின் முக்கிய பயன்கள் விவசாயிகளுக்கு விளக்கமாக கூறப்பட்டது.

மேலும், ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பதால் விவசாயிகள் நேரடியாக மருந்து தெளிப்பில் ஈடுபட வேண்டிய அவசியம் குறைவதால், அவர்களின் உடல்நலம் பாதுகாக்கப்படும் என்றும், மருந்து வீணாவதை தவிர்க்க முடியும் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர். பயிர்களின் உயரம் மற்றும் அடர்த்திக்கு ஏற்ப மருந்து தெளிப்பு செய்ய முடிவதால், பயிர் சேதம் குறையும் எனவும் எடுத்துரைக்கப்பட்டது.

அதேபோல், ட்ரோன் தெளிப்பு தொழில்நுட்பத்திற்கு அரசின் மானியங்கள், பயிற்சி பெறும் வாய்ப்புகள் மற்றும் எதிர்காலத்தில் இது வணிக ரீதியாகவும் விவசாயிகளுக்கு பயனளிக்கும் தொழில்நுட்பமாக இருக்கும் என்பதையும் மாணவர்கள் விவசாயிகளிடம் விளக்கினர்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள், ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கும் தொழில்நுட்பம் நவீன வேளாண்மைக்கு மிகவும் உதவியாக இருப்பதாகவும், இதனை எதிர்காலத்தில் தங்களது விவசாயத்தில் பயன்படுத்த ஆர்வம் உள்ளதாகவும் கருத்து தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சி மூலம், நவீன வேளாண் தொழில்நுட்பங்களை கிராமப்புற விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்கும் பணியில் பிஜிபி வேளாண் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# தமிழக தோட்டக்கலை அலுவலர்களுக்கான தென்னையில் ஐந்து நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம்

தஞ்சாவூர், பிப்.12

மத்திய வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சகத்தின் ஆய்வு அறிக்கையின் படி தமிழகத்தில் தென்னை பயிரிடும் அனைத்து மாவட்டங்களிலும் பூச்சி நோய் தாக்குதல் அதிக அளவில் உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் அதிக அளவில் பூச்சி நோய் மருந்துகளை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துகின்றனர்.




இதற்கு சரியான முறையில் தீர்வு காணவும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாளவும், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிலையம் (TNAU), வேப்பங்குளம் இணைந்து நடத்தும் தென்னையில் ஐந்து நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் 09.02.26 முதல் 13.02.26 வரை பட்டுக்கோட்டையில் உள்ள மண்டல ஊரக பயிற்சி மையத்தில் நடைபெறுகிறது.

இதன் துவக்க விழாவானது 09.02.26 அன்று காலை 10 மணியளவில் முனைவர் K.குமணன், இணை பேராசிரியர் மற்றும் தலைவர், தென்னை ஆராய்ச்சி நிலையம் (TNAU)

வேப்பங்குளம், துவக்கி வைக்கப்பட்டு தலைமை ஏற்று நடத்தினார். இவர் தமது உரையில் தோட்டக்கலை அலுவலர்கள், தென்னையில் பூச்சி, நோய், களை மேலாண்மை மற்றும் அறுவடை பின் சார் தொழில்நுட்பம் குறித்து நன்கு கற்றுக் கொள்ள வேண்டும் என கூறினார்.

நிகழ்ச்சியில் A.வெங்கட்ராமன், தோட்டக்கலை துணை இயக்குனர், சிறப்புரையாற்றினார். அவரது சிறப்பு உரையில் தோட்டக்கலை அலுவலர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கற்றுக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். ராகினி, உதவி தோட்டக் கலை இயக்குனர், தனது சிறப்புரையில், கற்பக விருச்சமான தென்னையில் அனைத்து விதமான சாகுபடி தொழில் நுட்பத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் நிசிந்தா, நன்றி கூறினார்.

இந்த பயிற்சிக்கு தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சேலம், கோவை, மதுரை, தேனி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த 40 தோட்டக்கலை அலுவலர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இம்மையத் தின் பயிர் பாதுகாப்பு அலுவலர்களான முனைவர். ர.கோவிந்த ராஜ், M.அமுதா மற்றும் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் களான ராஜேஸ்வரி, ரஷ்மி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். வாகனம், தங்கும் வசதி மற்றும் உணவு ஏற்பாடுகளை அபின் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஏற்பாடு செய்திருந்தனர்.




# எள்ளின் பச்சைப்பூ நோய் கட்டுப்பாட்டுக்கு இயற்கை செயல்விளக்கம்



நாமக்கல், பிப்.12

நாமக்கல் வட்டாரம், ராசம்பாளையம் கிராமத்தில், எள் பயிரில் ஏற்படும் பச்சைப்பூ நோய் தாக்கத்தை கட்டுப் படுத்த வேம்பெண்ணெய் அடிப்படையிலான இயற்கை மேலாண்மை முறையை குறித்து பிஜிபி வேளாண் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் நேரடி களச் செயல் விளக்கம் நடத்தினர். இந்த செயல்விளக்கத்தில், வேம் பெண்ணெய் பயன்படுத்தி குறைந்த செலவில், சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான நோய் மற்றும் பூச்சி கட்டுப்பாட்டு கரைசல் தயாரிக்கும் முறை விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. இதில், சிறிய பாத்திரத்தில் 30 மில்லி வேம்பெண்ணெயை தேவையான அளவு திரவ சோப்புடன் கலந்து நன்றாக கிளறி பால் போன்ற கலவையாக மாற்றி, அதை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் என மாணவிகள் தெரிவித்தனர்.

இந்த கரைசலை காலை நேரம் அல்லது மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும் என்றும், விதைத்த 20-25 நாட்களுக்குப் பிறகு முதல் தெளிப்பு மேற்கொண்டு, அதன் பின்னர் 10-12 நாட்கள் இடைவெளியில் மறுதெளிப்பு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இந்த இயற்கை முறையை பின்பற்றுவதன் மூலம் எள் பயிரில் பச்சைப்பூ நோய் பரவல் கட்டுப்படுத்தப்ப டுவதுடன், இரசாயன மருந்துகள் பயன்பாடு குறைந்து மண் வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என விளக்கப் பட்டது. இந்த நிகழ்வு விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், நிலைத்த வேளாண்மை மற்றும் இயற்கை பயிர் பாதுகாப்பை ஊக்குவிக்கும் பயனுள்ள களச் செயற்பாடாக அமைந்தது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வணிகத்திற்கு அடித்தளமான பண்டமாற்று முறை - ஓர் பார்வை



வணிகம் (TRADE, COMMERCE) என்னும் தொழிலில் வளம் பெறும் நாடு எதுவோ அதுவே எல்லா வளத்திலும் சிறந்து விளங்கும் என்பது நம்முடைய முன்னோர்களின் கூற்று, ஆனால் நாகரீகம் தோன்றிய காலத்தில் இந்த தொழில் என்பது 'பண்ட மாற்று முறை (BARTER SYSTEM) தான் அதிக அளவில் நடந்துள்ளதாக பழந்தமிழர் ஆய்வு நூல்கள் தெரிவித்துள்ளது.

**பண்ட மாற்று வணிகம்**

பழங்காலத்தில் மக்கள் காசு கொடுத்து எந்த பொருளையும் வாங்கியதாக தெரியவில்லை. சங்க காலத்தில் கூட 'காணம் ' என்னும் பொற்காசுகள் இருந்தாக தெரிகிறது. இந்த காசுகள் வேப்பம் பழ வடிவில் இருந்தாக அகழாய்வுகள் தெளிவு படுத்தியுள்ளது. ஆனால் இது போன்ற காசுகள் அரிதாக தான் பயன்படுத்த பட்டதாக தெரிகிறது.

மக்கள் முழுக்க முழுக்க பண்ட மாற்று முறையில் தங்களுடைய விவசாய விளைபொருட்களை கொடுத்து பொருளை வாங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எடுத்துக்காட்டாக பச்சை பயிறுக்கு ஈடாக மீன் மாற்றி கொள்ள பட்டது. சில நேரங்களில் நெல்லுக்கு இணையாக உப்பின் மதிப்பு இருந்தது.

**பண்ட மாற்று முறை என்றால் என்ன?**

பண்ட மாற்று என்பது முழுக்க முழுக்க உள்ளூர் சார்ந்தே இருந்தது. இதற்கு முறையான போக்குவரத்து வசதிகள் அந்த

காலத்துல இல்லை என்பதாகும். அந்த காலத்துல எங்கே சென்றாலும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல சரியான பாதை கிடையாது. அப்படி சென்றாலும் நீர்நிலைகள் அடர்ந்த காடுகளை தாண்டி தான் செல்ல முடியும்.

**வணிக சாத்து குழுக்கள் விளக்கம்?**

அடுத்த அடுத்த நாட்களில் வணிகர்கள் ஒரு குழுவாக திரண்டு தங்களுடைய பொருட்களை இதர பகுதிக்கு கொண்டு சென்றனர். அவ்வாறு செல்வோரை ‘வணிக சாத்து குழுக்கள் என்று அழைக்கப்பட்டது. அதே போல கற்கால மக்கள் வேட்டைக்கு செல்ல சிறிய பாதைகள் உருவாகின. அந்த பாதைகளே பின்னாளில் அகன்ற பெரிய பாதையாக உருவெடுத்தது.

**என்ன பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது?**

இந்த பாதைகள் மூலம் உப்பு, மிளகு, உணவு பொருட்கள் போன்றவற்றை கழுதைகளில் ஏற்றி விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்டது. தங்களுடைய தேவைக்கேற்ப தங்களிடம் இருக்கும் பொருட்களை கொடுத்து தேவையான பொருளை பெற்றுக்கொண்டனர். இந்த முறை தான் படிப்படியாக உயர்ந்து பணத்தை பெற்றுக் கொண்டு பொருளை வணிகர்கள் கொடுத்தனர்.

இது தான் படிப்படியாக இன்று ஆன்லைன் வணிகம் வரை உயர்ந்துள்ளன.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**



# வயல்வெளிகளில் பூச்சி கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான பக்கெட் டிராப் அமைக்கும் முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.12

பி.ஜி.பி. வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள், வயல்வெளிகளில் பூச்சி கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான பக்கெட் டிராப் – வாளி பொரி அமைக்கும் முறையை விவசாயிகளுக்கு செய்முறை விளக்கமாக நடத்தினர். இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், வேதியியல் பூச்சிக்கொல்லி மருந்துகளின் மீது உள்ள சார்பை குறைத்து, குறைந்த செலவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பூச்சி எண்ணிக்கையை கண்காணித்து கட்டுப்படுத்தும் தொழில் நுட்பத்தை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்து வதாகும்.

பக்கெட் டிராப் என்பது எளிமையானதும், செலவுக் குறைந்ததும், பாதுகாப்பானதும் ஆன ஒரு கருவியாகும். இது ஈர்ப்பு முறையில் செயல்படுகிறது. குறிப்பிட்ட பூச்சிகளை ஈர்க்க பெரோமோன் அல்லது உணவு ஈர்ப்பான் பயன்படுத்தப்படுகிறது. ஒரு பிளாஸ்டிக் பக்கெட்டில் தண்ணீர் நிரப்பி, அதில் சிறிதளவு சோப்பு அல்லது டிடர்ஜெண்ட் சேர்க்கப்படுகிறது; இதனால் நீரின் மேற்பரப்பு இழுப்பு குறைந்து, அதில் விழும் பூச்சிகள் வெளியே வர முடியாமல் சிக்கிக் கொள்கின்றன. ஈர்ப்பான் குலை உயரத்திற்கு சமமாக பக்கெட்டின் மேல் பொருத்தப்படுகிறது. வாசனைக்கு ஈர்க்கப்பட்ட பூச்சிகள் பக்கெட்டில் விழுந்து அழிகின்றன என்பதை மாணவர்கள் நேரடியாக களத்தில் செய்து காட்டினர். மேலும், இந்த டிராப் முறையை தேங்காய், காய்கறி, பருப்பு மற்றும் பல்வேறு தோட்டக் கலை பயிர்களில் முக்கிய பூச்சிகளை கண்காணிக்கவும், கூட்டமாக பிடித்து எண்ணிக்கையை குறைக்கவும் பயன்படுத்தலாம் என விளக்கினர். இதன் மூலம் பூச்சி தாக்குதலை ஆரம்பத்திலேயே அறிந்து, தேவையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை சரியான நேரத்தில் மேற்கொள்ள முடியும். இதனால் அடிக்கடி பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பதற்கான அவசியம் குறைந்து, உற்பத்தி செலவு குறைவதுடன், விளைபொருட்களில் நச்சு மீதமிருப்பதும் தவிர்க்கப்படுகிறது. பயனுள்ள பூச்சிகள், வயல்வெளி தொழிலாளர்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கும் இது பாதுகாப்பான முறையாகும். ஒரு ஏக்கருக்கு பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கையில் டிராப்களை

அமைக்க வேண்டும், அவற்றை அடிக்கடி பரிசோதித்து சுத்தம் செய்ய வேண்டும், மேலும் ஈர்ப்பானை குறிப்பிட்ட கால இடைவெளியில் மாற்ற வேண்டும் என்பதையும் மாணவர்கள் வலியுறுத்தினர். பக்கெட்டில் சிக்கும் பூச்சிகளின் எண்ணிக்கையை பதிவு செய்து வைத்தால், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை நடைமுறைகளில் (IPM) சரியான முடிவுகளை எடுக்க உதவும் என்றும் தெரிவித்தனர். இந்த செய்முறை விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், நிலையான மற்றும் அறிவியல் சார்ந்த பூச்சி கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.



# வேளாண்மை கல்லூரி மாணவர்கள் – உதவி வேளாண்மை இயக்குநருடன் கலந்துரையாடல்



நாமக்கல், பிப்.12

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் வட்டாரத்தில் பிஜிபி வேளாண்மை கல்லூரி மாணவர்கள், உதவி வேளாண்மை இயக்குநருடன் இணைந்து விவசாயிகளை நேரில் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர். இந்த சந்திப்பு விவசாயிகளின் தற்போதைய நிலை, பயிர் மேலாண்மை சிக்கல்கள் மற்றும் அரசுத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் விவசாயிகள் நீர்ப்பாசன குறைபாடு, உரங்கள் மற்றும் விதைகள் கிடைப்பதில் உள்ள சிக்கல்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை முன்வைத்தனர். அதற்கு உதவி வேளாண்மை இயக்குநர் மற்றும் கல்லூரி மாணவர்கள் தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் நடைமுறை தீர்வுகளை வழங்கினர்.

மேலும், அரசு வழங்கும் வேளாண்மைத் திட்டங்கள், மண் பரிசோதனை அவசியம், உயிரி உரங்களின் பயன்பாடு ஆகியவற்றைப் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப் பட்டது. இந்நிகழ்ச்சி விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்ததுடன், கிராமப்புற வேளாண்மை முன்னேற்றத்திற்கு உதவியாக இருந்தது.

இந்த சந்திப்பு மூலம் விவசாயிகள் தங்கள் பிரச்சினைகளை நேரடியாக பகிர்ந்து தீர்வுகளை பெற்றதில் மகிழ்ச்சி தெரிவித்தனர். கல்லூரி மாணவர்கள் தங்களது புல அனுபவத்தை மேம்படுத்தியதுடன், விவசாயிகளுடன் நெருக்க மான தொடர்பை ஏற்படுத்தும் வாய்ப்பாகவும் அமைந்தது.

# மக்காச்சோளப் பயிரில் தண்டு துளைப்பான் மேலாண்மை : வேளாண் கல்லூரி மாணவர்கள் விளக்கம்

நாமக்கல், பிப்.12



நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவர்கள், தங்களது இறுதியாண்டு பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெறும் கிராமப்புற அனுபவ பயிற்சி (RAWE) திட்டத்தின் கீழ் எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளை நேரடியாக சந்தித்து, பயிர் மேலாண்மை மற்றும் பூச்சி கட்டுப்பாடு தொடர்பான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

இந்த பயிற்சியின் ஒரு பகுதியாக, எலச்சிப்பாளையம் பகுதியில் உள்ள விவசாயி மணி அவர்களின் மக்காச்சோளப் பயிரை ஆய்வு செய்த மாணவர்கள், பயிரின் ஆரம்ப வளர்ச்சி நிலையிலேயே தண்டு துளைப்பான் (Stem borer) பூச்சியின் தாக்குதல் தென்படு வதை கண்டறிந்தனர். இப்பூச்சி தாக்கு தலால் இலைகளில் துளைகள் உருவாகுதல், மைய இலை உலர்தல் (Dead heart), தண்டின் வளர்ச்சி பாதிக்கப்படுதல் போன்ற அறிகுறிகள் தோன்று வதுடன், விளைச்சல் கணிசமாக குறையும் அபாயமும் உள்ளது.

இதனை கட்டுப்படுத்தும் நோக்கில், ரசாயன பூச்சிக்கொல்லி களை உடனடியாக பயன்படுத்தாமல், இயற்கை மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறைகளை பின்பற்ற வேண்டும் என தெரிவித்தனர்.



# டிரைக்கோடெர்மா விரிடியின் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



கரூர், பிப்.12

கரூர் மாவட்டம், வெண்ணமலை வட்டாரத்தில் உள்ள புகழூர் கிராமத்தில் பி.ஜி.பி. வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவிகள், தங்களின் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் செயல் விளக்கம் வழங்கினர். இந்நிகழ்வில், உயிரி பூசனக் கொல்லியான டிரைக்கோடெர்மா விரிடியின் முக்கியத்துவம், பயன்கள் மற்றும் பயன்பாட்டு முறைகள் குறித்து விவசாயி களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, மண்ணில் ஏற்படும் பூஞ்சை நோய்களை கட்டுப்படுத்துதல், பயிர்களின் வேர் வளர்ச்சியை மேம்படுத்துதல், மகசூல் அதிகரிப்பு மற்றும் ரசாயன பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டை குறைப்பதில் டிரைக்கோடெர்மா விரிடி வகிக்கும் பங்கு குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், விதை சிகிச்சை, மண் சிகிச்சை மற்றும் பயன்பாட்டு அளவு குறித்த நடைமுறை விளக்கங்களும் வழங்கப்பட்டன. இச்செயல் விளக்கம் விவசாயி களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

**பயன்படுத்தும் முறைகள்**

**விதை நேர்த்தி**

1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் கலந்து 24 நேரத்திற்கு பின் விதைக்கவும்.

**நிலத்தில் இடுதல்**

1 கிலோ / ஏக்கருக்கு டி.விரிடியை கிலோ தொழு உரத்துடன் கலந்து இடுதல்.

**கரணை கிழங்கு நேர்த்தி**

500 கிராம் டி.விரிடியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 5-10 மணி நேரம் ஊற வைத்து பின் நடவு செய்யவும்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



கடலூர், பிப்.12

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் அடுத்த கண்டமங்கலம் கிராமத்தில், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு வேளாண் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களின் ஊரக வேளாண் பணி அனுபவம் திட்டத்தின் கீழ் கண்ட மங்கலம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ஊரகப் பங்கேற்பு மதிப்பீடானது குழு ஆசிரியர் டாக்டர் M.வெற்றிச் செல்வன் வழிகாட்டுதலின்படி வேளாண் மாணவர்களான ஆகாஷ்.சி, அரவிந்த் கிருஷ்ணா.தி, அரவிந்த்.சி, அருள்.ச, அருள் குமார்.வெ, அழகேசன்.வி, பாலாஜி.ப, பாலாஜி.சு, பாலாஜி.ரா ஆகியோர் விழாவை சிறப்பாக நடத்தினர். இந்நிகழ்ச்சியில் கிராமத்தின் வரைபடம், மக்கள் தொகை, நீர்வளம், கல்வியறிவு மற்றும் பயிர் சாகுபடி போன்ற தகவல் பற்றி இந்நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் கிராம பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் இவ்விழாவில் பங்கேற்றனர். பின்பு பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

# மீன் அமிலம் தயாரிப்பு குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்த வேளாண் மாணவர்கள்

நாமக்கல், பிப்.12

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் தங்களது கிராமப்புற அனுபவ பயிற்சி (யூபுநிசி) திட்டத்தின் ஒரு பகுதியாக எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளை சந்தித்து பயிர் மேலாண்மை தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில், இன்றைய தினம் விவசாயி சக்திவேலை நேரில் சந்தித்த மாணவர்கள், இயற்கை வேளாண்மையில் முக்கியத்துவம் பெறும் மீன் அமிலம் (Fish Amino Acid) தயாரிக்கும் முறையை விரி வாக விளக்கமளித்தனர். மீன் கழிவுகள் மற்றும் கருப்பட்டி (அல்லது

நாட்டு சர்க்கரை) சம அளவில் கலந்து காற்று புகாத வகையில் மூடி, 30 முதல் 45 நாட்கள் நிழலான இடத்தில் நெகிழ்வு செயல்முறைக்கு உட்படுத்தி தயாரிக்கப்படும் இந்த ஊட்டச்சத்து திரவம், பயிர்களுக்கு மிகச் சிறந்த வளர்ச்சி ஊக்கியாக செயல்படுகிறது என எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், மீன் அமிலத்தில் உள்ள அமினோ அமிலங்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் தாவரங்களின் வேர் வளர்ச்சியை தூண்டி, இலைகளின் பசுமையை அதிகரித்து, பூக்கும் மற்றும் கனிவரத்தையும் மேம்படுத்துகின்றன என்பதையும் மாணவர்கள் விளக்கினர். இதனை 1:1000 என்ற அளவில் தண்ணீரில் கரைத்து தெளிப்பதன் மூலம் சிறந்த பலனை பெற முடியும் எனவும் கூறினர்.

இத்தகைய இயற்கை உரங்களை பயன்படுத்துவதன் மூலம் இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து, மண்ணின் உயிர்ச் சத்து மற்றும் நீடித்த வளத்தை பாதுகாக்க முடியும் என்பது வலியுறுத்தப்பட்டது. மாணவர்களின் இந்த முயற்சி விவசாயிகளிடம் நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் ஒரு சிறந்த முன்னெடுப்பாக அமைந்துள்ளது.

# வாழையில் கரும்பூஞ்சைக்கு மைதா கரைசல் – விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி




தேனி, பிப்.12

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரத்திற்குட்பட்ட பண்ணைப்புரம் கிராமத்தில், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரையில் பயிலும் மாணவி செ.பிரியதர்ஷினி, கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக வாழையில் கரும்பூஞ்சைக்கு மைதா 5% கரைசல் தயாரிப்பு, தேவையான பொருட்கள், பயன்கள் மற்றும் செய்முறை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

**பயன்படுத்தும் முறை**

மைதா 5% (1 கிலோ மைதா அல்லது ஸ்டார்ச்) 1 லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து, பின்னர் 20 லிட்டராக கரைக்கவும். மேகமூட்டமான காலநிலையில் தெளிப்பதை தவிர்க்கவும்.

# கபிலர்மலை வட்டாரத்தில் e-NAM சந்தை – ஓர் பார்வை



நாமக்கல், பிப்.12

கபிலர்மலை வட்டாரத்தைச் சேர்ந்த பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி நாமக்கல் மாவட்டம். கபிலர்மலை ஒன்றியத்தில் கிராமப்புற விவசாய அனுபவ பணித்திட்டம் (RAWE) மாணவிகள் இன்று e-NAM (மின்னணு தேசிய வேளாண் சந்தை) அமைப்பை பார்வையிட்டனர்.

2018 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும் இந்த சந்தையில், உள்ளூர் விவசாயிகளிடமிருந்து கொப்பரை மற்றும் தேங்காய் கொள்முதல் செய்யப்படுகிறது. வியாபாரிகள் ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் முறைகளில், விளை பொருட்களின் தரத்தின் அடிப்படையில் கொள்முதல் செய்து வருகின்றனர். தேங்காயின் தர அளவுகோல்களை கருத்தில் கொண்டு விலைகள் நிர்ணயிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்தையின் செயல்முறைகளில் விவசாயி பதிவு, மாதிரி எடுப்பு மற்றும் தர பரிசோதனை, மின்–ஏலம் நேரம் நிர்ணயம், வியாபாரிகளின் ஏலப் போட்டி, லாட் எடை அளவிடுதல், பில் தயாரித்தல், வியாபாரிகள் மூலம் விவசாயிகளுக்கு பணம் செலுத்துதல் மற்றும் விளைபொருட்கள் விநியோகம் ஆகியவை இடம்பெறுகின்றன. ஏலத்தில் பங்கேற்கும் வியாபாரிகளுக்கு எந்த விவசாயியின் விளைபொருள் விற்பனை செய்யப்படுகிறது என்ற விவரம் தெரியாததால், பதிவு குறியீட்டின் அடிப் படையிலேயே பரிவர்த்தனை நடைபெறுகிறது. இதன் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் சம வாய்ப்பு கிடைக்கிறது.

சிவகிரி, திண்டுக்கல் மற்றும் கரூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் இந்த ஏலத்தில் பங்கேற்கின்றனர். நடுவண் வியாபாரிகள் நீக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு அவர்களது விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பது முக்கிய நன்மையாக அமைந்துள்ளது.

# கரும் பூசான நோய்க்கு கட்டுப்பாடு – களப்பயிற்சியில் வேளாண் மாணவர்கள்

நாமக்கல், பிப்.12

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள், தங்களது களப்பயிற்சியின் ஒரு பகுதியாக எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளை நேரில் சந்தித்து, பயிர் மேலாண்மையில் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு உரிய தீர்வுகளை வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில், இன்றைய தினம் எலச்சிப்பாளையம் பகுதியைச் சேர்ந்த விவசாயி முருகேசனை சந்தித்த மாணவர்கள், அவரது பயிர்களில் காணப்பட்ட கரும் பூசான நோய் பாதிப்பை ஆய்வு செய்து, அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.

இந்த சந்திப்பின் போது, நோயின் ஆரம்ப அறிகுறிகள், பரவும் விதம், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விவசாயிக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் கரும் பூசான நோயைக் கட்டுப்படுத்த மைதா கரைசல் பயன்படுத்தும் முறையையும் செயல் விளக்கமாக மாணவர்கள் விளக்கினர்.

இந்த முயற்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், அறிவியல் சார்ந்த பயிர் மேலாண்மை முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# பியூசுடோமோனாஸ் (Pseudomonas) மண் பயன்பாட்டு விளக்கக் காட்சி

நாமக்கல், பிப்.12

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் பகுதியில் உள்ள விவசாயிகள் வயலில் பியூசுடோமோனாஸ் உயிரி கட்டுப்பாட்டு முகவரின் மண் பயன்பாடு குறித்து விளக்கக் காட்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி, பயிர்களில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தி ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான உயிரி முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துரைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.




நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வேளாண்மை அலுவலர்கள் மற்றும் நிபுணர்கள், பியூசுடோமோனாஸ் பயன்படுத்தும் முறைகள், குறிப்பாக மண் கலவை முறையில் பயன்படுத்துவது, நடவு முன் மற்றும் பிந்தைய பராமரிப்பு நடைமுறைகள் குறித்து நேரடியாக விளக்கம் அளித்தனர். மேலும், இந்த உயிரி முகவர் மண் நோய்க்கிருமிகளை கட்டுப்படுத்தி, செடிகளின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, வேர் வளர்ச்சியை மேம்படுத்தும் என்றும் தெரிவித்தனர்.

இந்த விளக்கக் காட்சியில் பல விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது சந்தேகங்களை நிபுணர்களிடம் கேட்டு தெளிவு பெற்றனர்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிரி வேளாண்மை முறைகளை ஊக்குவிக்கும் இந்த முயற்சி, மல்லசமுத்திரம் பகுதியில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

# கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் வெற்றி நிச்சயம் நான் முதல்வன் சான்றிதழ் வழங்கும் விழா



தூத்துக்குடி, பிப்.12

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் வெற்றி நிச்சயம் – நான் முதல்வன் திட்டத்தின் கீழ், அங்கக இடுபொருள் உற்பத்தியாளருக்கான பயிற்சி ஒரு மாத காலமாக நடத்தப்பட்டது. கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப.பாக்கியாத்து சாலிகா விழாவில் பேசுகையில் பள்ளிக் கல்வி முடித்து வேலையில்லா கிராமப்புற இளைஞர் மற்றும் மகளிருக்கு நடத்தப்படும் இந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி சுய தொழில் தொடங்கவும் தொழில் முனைவோராக மாறவும் வழிகாட்டியாக இருக்கும்.

தற்போதைய சாகுபடி முறையில் அங்கக வேளாண்மை முக்கிய பங்கு வகிப்பதால் அங்கக இடுபொருள் உற்பத்தி மூலம் அதிக வருமானம் ஈட்ட முடியும். இந்த பயிற்சியில் 25 பயனாளிகளுக்கு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மொத்தம் 210 மணி நேரம் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் 35 வயதிற்குட்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். சிறந்த அனுபவம் கொண்ட விஞ்ஞானிகளைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் கண்டுணர்வு சுற்றுலாவாக பல்வேறு அங்கக இடுபொருள் உற்பத்தி செய்யும் இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பயிற்சியில் அங்கக முறையில் பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள், பயிர் பாதுகாப்பு பாதுகாப்பு மருந்துகளான பஞ்சகாவ்யா, அமிர்த கரைசல், பூச்சிவிரட்டி, மீன் அமிலம், ஐந்திலைக் கரைசல் தயாரிப்பு முறைகள் செயல் விளக்கப் பயிற்சி மூலம் நடத்தப்பட்டது. அங்கக முறையில் உற்பத்தி செய்யப் பட்ட வேளாண் இடுபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

வெற்றி நிச்சயம் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் ஒரு மாத கால பயிற்சி பெற்ற தொழில் முனைவோர்கள் அனைவருக்கும் பயிற்சிக் கான சான்றிதழ் வழங்கப்படடது. கோவில்பட்டி நகராட்சி ஆணையர் மா.சுகந்தி சிறப்புரை ஆற்றினார். அதில் அங்கக வேளாண்மை கடைபிடிப்பதனால் இயற்கையை பாதுகாக்க முடியும். மக்கும் குப்பையை உரமாகவும் மக்காத குப்பையை மறு சுழற்சி செய்து பயன்படுத்த வேண்டும் என்றும் நெகிழிப்பைகளுக்கு பதிலாக துணிப்பைகளை பயன்படுத்தவும் கேட்டுக் கொண்டார். நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி சான்றிதழ் பெற்ற பயிற்சிய–ாளர்களை புதிய தொழில் துவங்கி தொழில் முனைவோராக வருவதற்கு வாழ்த்துக்களை கூறினார். இந்நிகழ்ச்சியில் இயற்கை இடுபொருள் தயாரிப்பாளர் சங்கத் தலைவர், தெ.ஆறுமுகம், வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை – உழவர் நலத்துறை, இரா, மணிகண்டன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். உழவியல் துறை பேராசிரியர் முனைவர் ம.ஜோசப் நன்றியுரை கூறினார். இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடு களையும் இந்தஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# உளுந்து விதை நேர்த்தி செய்வதனால் ஏற்படும் நன்மைகள் எடுத்துரைத்த வேளாண் மாணவி

நாமக்கல், பிப்.12

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை தொகுதி ஊணந்தாங்கள் ஊராட்சி கொளக்கமேடு கிராமத்தில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஸ்ரீ தரன் தலைமையில் நடைபெற்ற வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகாமில் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் கலந்து கொண்டு உளுந்து விதை நேர்த்தி பற்றியும், நீர் மேலாண்மை பற்றியும் தெளிவாக விளக்கினார்.

மேலும் விதை நேர்த்தி செயல் முறைகள் மற்றும் விதை நேர்த்தி செய்வதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் விரிவாக கூறினார்.



# வேளாண் மாணவிகள் நடத்திய கிராமிய மதிப்பீட்டு முகாம்



தஞ்சாவூர், பிப்.12

தஞ்சாவூர் வட்டாரத்தைச் சேர்ந்த கிராமங்களில், செங்கிபட்டி ஆர்.வி.எஸ் வேளாண் கல்லூரி மாணவிகளின் கிராமிய மதிப்பீட்டு முகாம் கல்லூரி முதல்வர் கிருஷ்ணமூர்த்தியின் வழிகாட்டலில், கல்லூரி இயக்குநர் பாண்டியராஜனின் தலைமையிலும் நடைபெற்றது. இதில் வேளாண் கல்லூரி மாணவிகள் மதுமிதா, மிராக்ளின் ஏஞ்சல், மிருதுளா ராணி, மோனிகா, மோகன கௌரி, மஹேஸ்வரி, நிவேதினி, நீலாவதி, பவித்ரா மற்றும் பிரதீபா உள்ளிட்டோர் கலந்து கொண்டு கிராம மக்களுடன் கலந்துரையாடினர்.

வேளாண் திட்ட பொறுப்பாளர்கள் சுந்தரவடிவு மற்றும் அருண் குமார் (உதவி பேராசிரியர், வேளாண் விரிவாக்கத்துறை) ஆகியோர் ஒருங்கிணைப்பிலும், உதவி பேராசிரியர்கள் கரிமனிசா மற்றும் ரம்யா ஆகியோர் வழிகாட்டலிலும் மாணவிகள் செயல்பட்டனர்.

வள வரைபடம், கால அட்டவணை, பருவ கால பயிர் விபரம், பிரச்சினை அடையாளம் காணல் போன்ற பி.ஆர்.ஏ. குழு ஒருங் கிணைப்பாளர்களின் வழிகாட்டலுடன் பயன்பட்டனர். இதன் மூலம் விவசாயிகளின் நீர் மேலாண்மை சிக்கல்கள், பயிர் தேர்வு, சந்தை வசதிகள், தொழில்நுட்ப தேவை உள்ளிட்ட முக்கிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன. கிராம மக்கள் தங்களின் அனுபவங்களையும் கருத்துக்களையும் வேளாண் கல்லூரி மாணவிகளுடன் பகிர்ந்து கொண்டனர்.

# ட்ரைக்கோடெர்மாவில் விதை நேர்த்தி பற்றி வேளாண் மாணவிகள் செயல் விளக்கம்

நாமக்கல், பிப்.12

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரத்திற்குட்பட்ட நவணியில் டிரைக் கோடர்மா என்ற உயிரியல் கட்டுப்பாட்டு காரணியை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்வது பற்றி செயல் விளக்கம் அளித்தனர்.

### விதை நேர்த்தி முறை



ட்ரைக்கோடெர்மா (Tricho-derma) விதை நேர்த்தி என்பது, 1 கிலோ விதைக்கு 5-10 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி பொடியை கலந்து, 1-12 மணி நேரம் வரை உலர வைத்து 24 மணி நேரத்திற்குள் விதைக்க வேண்டும். இதன் மூலம் மண்ணில் பரவும் பூஞ்சை நோய்களைத் இயற்கை முறையில் கட்டுப்படுத்தலாம்.

மேலும் பயிர் முளைப்புத்திறனை அதிகரித்து, வேர் அழுகல் மற்றும் வாடல் நோய்களிலிருந்து நாற்றுகளைப் பாதுகாக்கிறது.

# கோரைக் கிழங்கு பயிரின் சாகுபடி முறைகள் மற்றும் பாய் தயாரிப்பு குறித்தறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்

நாமக்கல், பிப்.12



PGP வேளாண்மை அறிவியல் கல்லூரி நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியத்தில் கிராமப்புற விவசாய அனுபவ பணித்திட்டம் (RAWE) மாணவிகள், கடந்த 10 ஆண்டுகளாக 2ே ஏக்கர் பரப்பளவில் கோரைக் கிழங்கு (Korai) பயிரிடும் விவசாயி மோகன சுந்தரத்தின் வயலைப் பார்வையிட்டனர்.

இந்தப் பார்வையின் போது, கோரைக் கிழங்கு பயிரின் சாகுபடி முறைகள், விதைப்புத் தொழில்நுட்பம், பாசனத்தின் முக்கியத்துவம், ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் உர பரிந்துரைகள் குறித்து விவசாயி விரிவாக விளக்கினார். பயிர் அறுவடை கைமுறையாக அரிவாளின் மூலம் மேற்கொள்ளப்படுவதாகவும், அறுவடைக்குப் பிறகு புல்லட் என்ஜின் பயன்படுத்தி தண்டுகள் பிளக்கப்பட்டு, பாய் தயாரிப்பிற்காக முறையாக வெயிலில் உலர்த்தப்படுகின்றன என்றும் தெரிவித்தார். இந்த கோரைக் பாய் தயாரிப்பிற்காக ஓமலூர், சேலம், ராயவேலூர் மற்றும் கரூர் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

# எருக்க இலை கரைசல் குறித்து விளக்கிய வேளாண் கல்லூரி மாணவி

நாமக்கல், பிப்.12

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம் துத்திக்குளம் கிராமத்தில் நாமக்கல் வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவி தனுஷ்யா ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு எருக்க கரைசல் மற்றும் அதனின் நன்மைகள் குறித்து செய்முறை விளக்கம் அளித்தார்.



இந்த பயிற்சியில் நான்கு கிலோ எருக்கம் இலைகளை நன்கு நறுக்கி 20 லிட்டர் தண்ணீரில் போட்டு ஐந்து நாட்கள் நிழலில் ஊறவைத்து தினமும் ஒருமுறை கிளறிவிட்டு ஐந்து நாட்களுக்கு பிறகு கரைசலை வடிகட்டி பயன்படுத்தலாம் என்பதையும் ஐந்து லிட்டர் எருக்க இலைகளுடன் ஐந்து லிட்டர் தண்ணீர் கலந்து ஒன்று புள்ளி ஒன்று விகிதம் இலைவலியாக தெளிக்கலாம், தேவைப்பட்டால் தண்டு பகுதிகளில் அதிக பால் இருந்தால் நேரடியாகவும் தெளிக்கலாம் என்றும் மற்றும் அதனின் பயன் களான இயற்கை பூச்சி விரட்டி மற்றும் போரான் சத்து பற்றாக் குறையைச் சரி செய்து காய்கறி பயிர்களுக்கு ஊட்டமளிக்கும் என்பதையும் மற்றும் தென்னை உள்ளிட்ட மரங்களில் பூ மற்றும் குறும்பு உதிர்வதை கட்டுப்படுத்தவும் உதவுகிறது இதனால் விவசாயிகள் பயிர்களின் தரம் மற்றும் விளைச்சலை மேம்படுத்தலாம் என்பதை விளக்கினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

**PRODUCT RANGES**

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

**RITHVIK PIPES PROUDLY TRUSTED BY**

LMW
isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID
BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**